பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

07 08 2026 6 45

வெள்ளிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. தேசிய கைத்தறி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

   மக்கள் கைத்தறி தயாரிப்புகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

2. கைத்தறி நெசவாளர்களின் கலைத்திறன், பாரம்பரியம் ஆகியவை நாட்டின் பெருமையை பிரதிபலிப்பதாக உள்ளது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.
3. அரசுப் பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.
4. தமிழகத்தில் கோவை, நீலகிரி, தேனி மாவட்டங்களில், ஓரிரு இடங்களில் இன்று பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
5. கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் Tanvi Sharma, Ashmita Chaliha, Rakshitha Ramraj காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தேசிய கைத்தறி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

1905-ம் ஆண்டு ஆகஸ்ட் 7-ம் தேதி இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு பகுதியாக தொடங்கப்பட்ட சுதேசி இயக்கத்தை நினைவுகூரும் வகையில் இந்த தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இத்தினத்தையொட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், முதலமைச்சர் திரு. விஜய் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், ஒவ்வொரு குடிமகனும் இத்தினத்தை உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் கொண்டாட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

ஏழ்மை நிலையில் உள்ள நெசவாளர்கள் குடும்பங்களுக்கும், ஆடை வடிவமைப்பில் ஈடுபடும் கைவினைக் கலைஞர்களுக்கும் மக்கள் ஆதரவளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தற்சார்பு இந்தியாவை உருவாக்கும் நடவடிக்கைகளில் சிறு மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள நெசவாளர் குடும்பங்களை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டு மக்கள் குறைந்தது ஒரு கைத்தறி தயாரிப்பை வாங்கி அதனை வீடியோ பதிவு செய்து நாடு முழுவதும பகிர வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இதன் மூலம் இந்திய கைவினைக் கலைஞர்களின் திறன் உலகளவிலான அங்கீகாரத்தைப் பெற வழிவகுக்கும் என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

சமூக வலைதளத்தில் மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், கைத்தறி நெசவாளர்களின் கலைத்திறன், அசாத்திய திறமை, பாரம்பரியம் ஆகியவை நமது நாட்டின் பெருமையை பிரதிபலிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. விஜய் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், கைத்தறி நெசவாளர்கள் தலைமுறை தலைமுறையாக நெசவுக் கலையை பேணிப் பாதுகாத்து மாநிலத்தின் வளமான பாரம்பரியத்திற்கும், பண்பாட்டிற்கும் சிறப்பு சேர்த்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

கைத்தறி நெசவாளர்களுக்கு அங்கீகாரம் கிடைக்கும் வகையில் அவர்களின் தயாரிப்புகளுக்கு நிலையான சந்தை வாய்ப்பு கிடைக்க மாநில அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறியுள்ளார்.

கைத்தறித் தொழில் மென்மேலும் வளர்ச்சியடைந்து நெசவாளர்கள் வாழ்வில் வளமும், மகிழ்ச்சியும் பெருகட்டும் என்று முதலமைச்சர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இத்தினத்தை முன்னிட்டு தேசிய அளவிலான நிகழ்ச்சிகளுக்கு மத்திய ஜவுளி அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது.

புதுதில்லியில் குடியரசுத்தலைவர் மாளிகையில் உள்ள கலாச்சார மையத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, கைத்தறி விருதுகளை வழங்குகிறார்.

கைத்தறித் துறையில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய 3 பேருக்கு கபீர் கைத்தறி விருதும், 19 பேருக்கு தேசிய கைத்தறி விருதும் வழங்கப்படுகிறது.

சேலத்தில் உள்ள இந்திய கைத்தறித் தொழில்நுட்பக் கல்லூரியின் மூலம் வழங்கப்படும் கைத்தறி மற்றும் ஜவுளித் தொழில் குறித்த பயிற்சி மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க உதவிடும் என்று அக்கல்லூரியின் இயக்குநர் திரு. தென்னரசு எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

நாகரிக பாரம்பரியத்தை அடித்தளமாக கொண்ட நவீன சமூகத்தை உருவாக்குவதே அரசின் குறிக்கோளாக உள்ளது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், நுகர்வு கலாச்சாரம், வளமான பொருள் சார்ந்த மனப்பான்மைக்கு அடிமையாகாமல் நாகரிக அடையாளத்துடன் சர்வதேச அரங்கில் வெற்றி பெறுவதே நம் அனைவரது கடமை என்று கூறியுள்ளார்.

நம்பிக்கை மற்றும் தொழில்முனைவுடன் கூடிய கடமையுணர்வு, நாகரிக ஞானம், கலாச்சாரப் பண்புகள் ஆகிய அம்சங்கள் ஒருங்கிணைந்த வளர்ச்சியடைந்த நாடாக இந்தியா உருவெடுக்க வேண்டும் என்று திருமதி நிர்மலா சீதாராமன் வலியுறுத்தினார்.

<<<<>>>>

தருமபுரி மாவட்டம் தொப்பூர் அருகே அரசுப் பள்ளி கழிவறை கதவை திறக்கச் சென்ற மாணவர்கள் மீது மின்சாரம் தாக்கியதாக வெளியாகியுள்ள செய்திகள் கடும் அதிர்ச்சியளிப்பதாக உள்ளது என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மாணவர்களுக்கு பெரிதளவு பாதிப்பு ஏற்படவில்லை என்பது ஆறுதல் அளித்தபோதிலும், அரசுப் பள்ளிகளில் தொடரும் அவல நிலை, மாநில அரசின் நிர்வாக குளறுபடிகளை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

மாநிலம் முழுவதும் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசுப் பள்ளிகள் இயங்கி வரும் நிலையில், அவற்றில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

மாணவர்களின் நலனில் எவ்வித சமரசத்திற்கும் இடமளிக்காமல் அரசுப் பள்ளிகளின் தர நிலையை உயர்த்துவதற்கான் நடவடிக்கைகளுக்கு மாநில அரசு உயர் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று திரு. நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில், முருகப் பெருமானின் அறுபடை வீடுகளுள் ஐந்தாம் படை வீடாகக் கருதப்படுகிறது.

இந்தத் திருக்கோயிலில், ஆதிக் கிருத்திகை தினத்தையொட்டி, தெப்பத் திருவிழா நேற்று வெகு விமர்சையாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(சவுண்ட் பைட் - தனசேகரன் - 40 செகண்ட்ஸ்)

<<<<>>>>

தமிழகத்தில் கோவை, நீலகிரி, தேனி மாவட்டங்களில், ஓரிரு இடங்களில் இன்று பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குத்தொடர்ச்சி மாவட்டங்களில் ஒருசிலப் பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசிலப் பகுதிகளில் இன்று மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

வங்கக்கடலின் ஒருசிலப் பகுதிகளில் நான்கு நாட்களுக்கு பலத்த சூறாவளிக்க காற்று வீசக்கூடும் என்பதால் அப்பகுதிகளில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**<<<<>>>>**

*இருவரிச் செய்திகள்*

காங்கோ தலைநகர் Kinshasa அருகே எபோலா வைரஸ் தொற்று காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளதையடுத்து, கண்காணிப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டு சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**<<<<>>>>**

இலங்கையில் கொழும்பு சிறைச்சாலையில் கைதிகளுக்கிடையே ஏற்பட்ட மோதலால் நிலவும் பதற்றமான சூழல் காரணமாக அங்கு ராணுவத்தினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

**<<<<>>>>**

பிரிக்ஸ் அமைப்பின் இரண்டு நாள் கலாச்சாரத் திருவிழா மத்தியப்பிரதேச மாநிலம் போபாலில் நேற்று தொடங்கியது.

**<<<<>>>>**

மேற்காசியாவில் நிலவும் பதற்றமான சூழல் காரணமாக, கச்சா எண்ணெய் விலை பீப்பாய் ஒன்றிற்கு பூஜ்யம் புள்ளி எட்டு சதவீதம் அதிகரித்துள்ளது.

<<<<>>>>

நடப்பு கல்வியாண்டிற்கான உயர்கல்வித்துறை மானியக் கோரிக்கை தொடர்பான ஆலோசனை கூட்டம் அத்துறைக்கான மாநில அமைச்சர் திரு விஸ்வநாதன் சென்னையில் நேற்று நடைபெற்றது.

<<<<>>>>

ராணுவத்தின் பொறியியல் சேவைப் பிரிவு சென்னை அலுவலகத் தலைவராக திரு ஈஸ்வர் தத் நேற்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

<<<<>>>>

நகர்ப்புற ஆதரவற்றோர் தங்குமிடங்களுக்கான நிலையான செயல்பாட்டு வழிமுறைகள் குறித்து, தன்னார்வலர்களுக்கு நேற்று பெருநகர சென்னை மாநகராட்சியில் பயிற்சி அளிக்கப்பட்டது.

<<<<>>>>

ராணிப்பேட்டை மாவட்டத்தில், மனித உயிர்களை பாதுகாப்பதில் தன்னலமற்ற சேவையாற்றியவர்களுக்கு மத்திய அரசால் வழங்கப்படும் விருதுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக ஆட்சியர் திருமதி பிரியா ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanvi Sharma, Ashmita Chaliha, Rakshitha Ramraj, ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில், இந்தியாவின் Tanvi Sharma, 21-16, 17-21, 21-13 என்ற செட் கணக்கில், சக நாட்டு வீராங்கனை Shriyanshi Valishetty-ஐ வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில், இந்தியாவின் Ashmita Chaliha 21-17, 21-6 என்ற செட் கணக்கில், கொரியாவின் Kim Min-Ji-ஐ வென்றார்.

மற்றொரு போட்டியில், இந்தியாவின் Rakshitha Ramraj 22-20, 21-10 என்ற செட் கணக்கில், ஜப்பானின் Manami Suizu-வை வென்றார்.

<<<<>>>>

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் கோவை அணி 34 ரன் வித்தியாசத்தில் சேலம் அணியை வென்றது.

இன்று நடைபெறும் ஆட்டங்களில், சேப்பாக் அணி - திருப்பூர் அணியையும், திண்டுக்கல் அணி - நெல்லை அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<>>>>

பெங்களூருவில் நடைபெற்ற 20 வயதிற்குட்பட்டோருக்கான ஆடவர் பயிற்சி கால்பந்துப் போட்டியில், இந்தியா 1-0 என்ற கோல் கணக்கில் சிங்கப்பூரை வென்றது.

<<<<>>>>

தேசிய ஜூனியர் ஆடவர் ஹாக்கி சாம்பியன் போட்டியில், ஒடிசா, மத்தியப்பிரதேசம் அணிகள் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளன.

<<<<>>>>

ஆசிய படகு சாம்பியன் போட்டி இந்தியாவில் அக்டோபர் ஐந்தாம் தேதி தொடங்குகிறது.

இப்போட்டியில் பல்வேறு நாடுகளில் இருந்து வீரர்கள் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>